**வத்தளை பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வத்தளை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வத்தளை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் மூலதன மானிய பெறுவனவுகள் ரூபா 78,408,018 தொகை முன்னைய ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்ட தவறை சரி செய்வதற்காக மீளாய்வாண்டில் நாட்குறிப்பு | 2022 ஆம் ஆண்டில் சரி செய்யப்பட்டுள்ளது. | 2022 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கம் 35 இன் மூலம் ரூபா 77,775,140 தொகை கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 632,878 இனால் மூலதன மானிய மீதி குறைத்தும் திரண்ட நிதியம் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நிதி விளைவுகளில் தாக்கம் ஏற்படுத்தாதிருந்த போதிலும் ஏனைய விரிவான வருமானக் கூற்றில் ஏனைய விரிவான வருமானங்களை இனங்காணும் போது மிகையில் / பற்றாக்குறையில் இனங்காணப்பட்ட மூலதன செலவின மானியப் பெறுமதி ரூபா 7,777,514 தொகை குறைத்து காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டதன் காரணமாக வருடத்திற்கான விரிவான வருமானம் ரூபா 15,555,028 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2022 ஆம் ஆண்டில் ஏனைய வருமானங்களை இனங்காணும் போது மிகையில் / பற்றாக்குறையில் இனங்காணப்பட்ட மூலதன செலவின மானியத்தின் பெறுமதி குறைத்து காண்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | காணிகளை கொள்வனவு செய்வதற்கு முத்திரைக் கட்டணம் மற்றும் சட்டத்தரணி கட்டணமாக ரூபா 311,500 தொகை காணியின் பெறுமதியில் சேர்த்து மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். 2022 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையும் கிடைத்த முத்திரைக் கட்டணம் மற்றும் சட்டத்தரணி கட்டணங்கள் காணியின் பெறுமதியை மூலதனமாக்கி சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | முத்திரைக் கட்டணம் மற்றும் சட்டத்தரணி கட்டணங்கள் காணியின் பெறுமதியில் சேர்த்து மூலதனமாக்கப் படல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 21 கணக்கு விடயங்களுக்குரிய 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் | 19 கணக்குகளுக்குரிய வேறுபாடுகள் சரி செய்யப்பட்டுள்ளது. (ஆதனவரி மற்றும் களஞ்சிய இருப்பு மீதி | கணக்கு அறிக்கைகளில் அதற்குரிய ஆவணங்கள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரமான மீதி ரூபா 517,234,895 மற்றும் உபயோக ஆவணங்களின் பிரகாரம் மீதி ரூபா 520,123,753 ஆனமையால் ரூபா 2,888,858 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | தவிர) 2022 இன் இறுதிக் கணக்குகளுடன் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படும். | பட்டோலைகளுடன் இணக்கம் செய்து சரியான மீதி பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதி, நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 221,002,530 தொகை மற்றும் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் ரூபா 225,054,010 ஆனமையால் ரூபா 4,051,480 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | கணக்கு அறிக்கைகள் உரிய ஆவணங்கள், பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளுடன் இணக்கம் செய்து சரியான மீதி பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (இ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதி காலப்பகுப்பாய்வின் படி ரூபா 161,930,302 மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 161,735,502 ஆனமையால் ரூபா 194,800 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | கணக்கு அறிக்கைகள் உரிய ஆவணங்கள், பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளுடன் இணக்கம் செய்து சரியான மீதி பேணிச் செல்லப்படல் வேண்டும். |

### 1.6.3 பெறவேண்டிய / செலுத்த வேண்டிய மீதிகள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 01 வருத்திற்கு குறைந்த, 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையில், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையில், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட கிடைக்க வேண்டிய வைப்பு மீதிகள் முறையே ரூபா 121,883,529 தொகை, | ஏற்றுக்கொள்கின்றோம். | பெறவேண்டிய கணக்கு மீதிகளை பரீட்சித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 42,232,915 தொகை, ரூபா 19,976,997 தொகை, ரூபா 23,831,721 தொகை மற்றும் ரூபா 17,128,848 என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | பெறுமதிசேர் வருமான வரி கணக்கினை விட செலவின அதிகரித்ததன் அடிப்படையில் வற் வரி கணக்கில் ரூபா 1,261,013 வரவு மீதி மீள செலுத்த வேண்டிய வைப்பின் கீழ் 2020 ஆம் ஆண்டு முதல் காண்பிக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டு வரையில் பெறுமதிசேர் வருமான வரிகளில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த மீதி தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | பெறுமதிசேர் வரி மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 01 வருடத்திற்கு குறைந்த, 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையில், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையில், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட செலுத்த வேண்டிய மீதிகள் முறையே ரூபா 125,671,979 தொகை, ரூபா 33,836,675 தொகை, ரூபா 1,406,521 தொகை, ரூபா 260,408 தொகை, மற்றும் ரூபா 689,945 தொகைகள் 2022 ஆகஸ்ட் 22 ஆந் திகதி வரையிலும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | செலுத்த வேண்டிய மீதிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| 2016 ஏப்ரல் 28 ஆந் திகதிய LGD/04/2016 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் ஊ பந்தி | 140,000,000 | நிலையான வைப்பு பணத்திற்காக மாவட்ட உதவி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 80 மில்லியன் மற்றும் 2020 ஆம் ஆண்டின் போது 60 மில்லியன் ஆக நிலையான வைப்பு பணமாக்கி கொள்ளப்பட்டிருந்த துடன் 2019 மார்ச் 26 ஆந் திகதிய சபை தீர்மானத்தின் படி நிலையான வைப்பை பணமாக்கி கொள்ளும் ஆரம்ப நோக்கம் சந்தைத் தொகுதி மற்றும் சுடலைக் கூடத்தை நிர்மாணிப்பதாக இருந்த போதும் அதற்காக செலவிடப்படாமல் பொது நிர்வாக நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிலையான வைப்பொன்றை பணமாக்கி கொள்ளும் போது உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் முன் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் நிலையான வைப்பை பணமாக்கி கொள்ளும் போது உரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் நோக்கமிடப்பட்ட பணிகளுக்காக இதனை ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 120,504,997 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 257,160,854 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரியும் வரியும் | | |
| | காலப்பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் 01 வருடத்திற்கு குறைந்த, 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையே, 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையே, 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையே, மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட முறையே ரூபா 13,352,937 தொகை, ரூபா 22,103,096 தொகை, ரூபா 19,284,014 தொகை, ரூபா 21,746,205 மற்றும் ரூபா 12,887,412 ஆக காணப்பட்டதுடன் நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு ஆதனங்களை தடை செய்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம் 2021 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் காரணமாக ஆதனங்களை தடை செய்வதற்கு முடியாதிருந்தது. | நிலுவை ஆதனவரி மீதி பகுப்பாய்வு செய்து பொருத்தமான திட்ட முறைமை ஒன்றை பின்பற்றி நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கடை வாடகை | | |
| (i) | நிலுவை வருமான காலப்பகுப்பாய்வு அறிக்கையின் படி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகால கடை வாடகை மீதி ரூபா 8,371,899 தொகையில் 01 வருடத்திற்கு குறைந்த, 01 இற்கும் 03 வருடங்களுக்கு இடையே, 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையே, 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையே மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகள் முறையே ரூபா 2,260,737 தொகை, ரூபா 813,524 தொகை, ரூபா | ஏற்றுக்கொள்கின்றோம். | நிலுவைக் கடை மீதியை பகுப்பாய்வு செய்து பொருத்தமான திட்ட முறைமை யொன்றை பின்பற்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 437,716 தொகை, ரூபா 1,994,391 தொகை மற்றும் ரூபா 2,865,531 ஆக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இந்த நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | ஹெந்தல உப அலுவலகத்தில் 08 கடைகளின் உடன்படிக்கை காலம் முடிவடைந்த போதும் மீண்டும் உடன்படிக்கை செய்யாமையினால் மீளாய்வாண்டில் சிட்டையில் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும் இந்தக் கடைகளுக்காக 2021 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 1,974,178 தொகையான நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்கு 2022 யூலை 12 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | கடைகள் தொடர்ந்து நடாத்திச் செல்லப்படுகின்றதா என பரீட்சித்து கடை வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் மீண்டும் உடன்படிக்கை செய்து, வருடாந்த சிட்டையில்கள் மேற்கொண்டு, மாதாந்த கடை மற்றும் நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வாடகை<br>---------------<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 கடைகளுக்குரிய வாடகை ரூபா 366,249 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | திக்ஓவிட்ட கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக சபையின் காணியை வழங்குதல் | | |
| (அ) | திக்ஓவிட்ட கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக காணியை வாடகைக்கு வழங்கியதற்காக 2009 ஆம் ஆண்டு முதல் 2011 மே வரை தனியார் நிறுவனமொன்றிலிருந்து ரூபா 525,000 தொகையும், 2011 யூலை 01 முதல் 2021 ஏப்ரல் வரை 01 வரை கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையிலிருந்து ரூபா 2,925,000 தொகையும் அறவிட வேண்டிக் காணப்பட்டதுடன் இந்த தொகை கணக்கீடும் செய்யப்பட்டிருக்கவில்லை. | கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் காணியை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. பர்ன் நிறுவனத்தின் மூலம் நிலுவைப் பணம் செலுத்தாமை தொடர்பாக பல தடவை அறிவிக்கப்பட்டுள்ளதுடன் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத் தருகின்றோம். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கும் நிலுவை வருமானத்தை கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1)(ஆ) பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய வீதிகள் தொடர்பான மெய்மையாய்வை மேற்கொண்டு பெயர்ப் பதிவேடு வர்த்தமானியின் மூலம் பிரசுரித்து சகல வீதிகளையும் சபையின் உரித்துக்கு கையேற்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான 1909 வீதிகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தல் வீதிகள் தொடர்பாக மெய்மையாய்வை மேற்கொண்டு உரிய பெயர்ப்பதிவேட்டை வர்த்தமானியின் மூலம் பிரசுரித்து சபையின் உரித்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய வீதிகள் சபையின் உரித்திற்கு கையேற்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வெலிசர உப அலுவலகத்தில் 2021 ஆம் ஆண்டிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் ஆய்வு செய்யப்பட்டு அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 34 நிறுவனங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் ஹந்தல, பமுனுகம உப அலுவலகங்களில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் கொவிட் தொற்றுநோயின் காரணமாக அவ்வவ்போது நாடு மூடப்பட்டமை, வியாபார நிலையங்கள் மூடப்பட்டமை காரணமாக இந்த ஆண்டில் புதிய சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு வருகை தரவில்லை. | மெய்மையாய்வின் மூலம் இனங்காணப்பட்ட நிறுவனங்களின் வருமானத்தை அறவிடுவதற்கும் புதிய ஆய்வினை மேற்கொண்டு நிறுவனங்களை இனங்கண்டு அனுமதிப்பத்திர வருமானத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 58,003 ஆன ஆதனங்கள் 2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி மதிப்பீட்டைக் கொண்டு சிட்டையிடப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். உள்ளூராட்சி திணைக்களத்தின் பங்களிப்புடன் மதிப்பீட்டுத் திணைக்களத்துடன் தொடர்புபடுத்தி புதிய மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்கு 2020 ஆம் ஆண்டு முதல் ஆதனங்களின் தகவல்கள் சேகரிக்கப் படுகின்றது. காணி கூறிடலின் போதும் மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்காக தரச்சான்றிதழ் வழங்கும் போது வருமான பரிசோதகர் மூலம் உரிய ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு புதிய ஆதனவரி இலக்கம் வழங்கும் போது ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் புதிய ஆதனவரி வீதத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதிவு உரித்துடன் நிதியமைச்சிற்கு சொந்தமாக இருந்தமையால் | கெப் வண்டியை பழுதுபார்க்க முடியாத | உரிமை தன்மையை |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாத பெறுமதி இனங்காண முடியாத செயற்பாடற்ற நிலையில் வெலிசர வாகனத் தளத்தில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்ட கெப் வண்டியை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் அல்லது உரித்தினை கையேற்று முறையான பிரகாரம் அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையினால் பதிவு உரித்தை நிதியமைச்சிற்கு சொந்தமாக இருந்தமையாலும் உரிய கெப் வண்டியின் உரித்தை முறையான பிரகாரம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கையேற்று பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது முறையான பிரகாரம் அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை | | |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 160 காணிகள் காணப்பட்டதுடன் அதில் 82 காணிகளுக்கு உரித்துறுதி காணப்படவில்லை. | தற்போது வெளியீட்டு உரித்துறுதி மற்றும் நில வரைபடம் தயாரிப்பதற்கு கேள்வி கையளிக்கப்பட்டுள்ளது. | உரித்துறுதியை தயாரித்து சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) சொத்துக்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்கப் பெறாமை | | |
| 02 றூட் 11 பேர்ச் பரப்பளவையுடைய கெந்தல அறுவைக்கூடம் அமைந்துள்ள காணியில் 2014 ஆம் ஆண்டில் மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 2 மில்லியன் செலவில் கட்டிடமொன்றும் மற்றும் பேரூந்து நிலையமொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த நிலையம் தனியார் பேருந்துகள் மற்றும் மோட்டார் வாகனங்கள் நிறுத்தும் தளத்திற்காக கட்டணம் அறவிடப்படமல் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. 2021 | பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபையுடன் அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் தொகையில் உடன்படிக்கை செய்வதற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடிகளுக்கு இடையே இவ்வளவு தொகையை செலுத்துவதற்கு முடியாதிருந்ததாகவும் அமைச்சருடன் கலந்துரையாடி பதிலொன்றை வழங்குவதாகவும் | சபைக்கு சொந்தமான வருமானங்களை உழைக்க கூடிய சொத்துக் களிலிருந்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெப்ரவரி 22 ஆந் திகதிய அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு கடிதத்தின் பிரகாரம் வாடகை அடிப்படையில் பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு வழங்க வேண்டிய வாடகைப் பெறுமதி ரூபா 976,000 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக சபைக்கு சேகரிக்க முடியுமாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | அறிவிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை செய்து மதிப்பீட்டு பெறுமதியை செலுத்துமாறும் இல்லையாயின் காணியை எங்களுக்கு வழங்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | கையேற்கப்படாத சொத்துக்கள்<br>-------------------------------<br>2012 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சபையின் பயன்பாட்டிற்காக ஏனைய அரச நிறுவனங்களிலிருந்து சபைக்கு கிடைக்கப் பெற்ற ரூபா 41,144,290 பெறுமதியான வாகனங்கள் 2022 யூலை மாதம் வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை. | கையேற்பதற்குரிய ஆவணங்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | சபையினால் பயன்படுத்தப் படுகின்ற சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சொத்துக்களை உரித்தற்றதாக்குதல்<br>-----------------------------------<br>1988 ஆம் ஆண்டின் போது பேராசிரியர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணாந்து அவர்களினால் உரித்துறுதி மூலம் ரூபா 188,000 பெறுமதியுடைய 11 ஏக்கர் 02 றூட் 11 பேர்ச் பரப்பளவையுடைய உஸ்வெட்டகெய்யாவ பாஸ்வத்த காணி, வத்தள பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.<br>1991 ஆம் ஆண்டின் போது தலைவர் மற்றும் | உஸ்வெட்டகெய்யாவ பாரிஸ்வத்த காணியின் உரித்துறுதி தயாரித்து சட்டத்தரணிக்கு இது தொடர்பாக விளக்கங்களை பெற்றுக் கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது. | காணி கையளித்தல் உரித்துறுதியில் குறிப்பிடப்பட்ட நோக்கத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செயலாளரால் இந்தக் காணி 57 காணிக் கூறுகள் அல்லது அதற்கு அண்ணளவான எண்ணிக்கையில் பகிர்ந்து நன்கொடை உரித்துறுதி மூலம் உரித்தற்றதாக்கப்பட்டிருந்தது.

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | பெறுகைத் திட்டமொன்றை தயாரித்து அதன் பிரகாரம் கொள்வனவு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்காக ரீ-சேட் கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட தொகையில் ரூபா 87,395 பெறுமதியான 113 ரீ-சேட் கிடைக்கப் பெறாதிருந்ததுடன் சபைக்கு ஏற்பட்ட நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். இந்தப் பணம் 30 நாட்களுக்குள் செலுத்துவதற்கு வத்தள பொலிசிற்கு வழங்குனர் இணங்கியிருந்தார். | நட்டத்தை வழங்குனரிட மிருந்தோ அல்லது பொறுப்பு வாய்ந்த தரப்பினரிட மிருந்தோ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் வெற்றிடம் | | |
| | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் பதவியணியினரின் எண்ணிக்கையில் 45 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்கள் தொடர்பாக வருடாந்தம் காலாண்டு அறிக்கை மூலம், கடிதம் மூலமும் உரிய ஊழியர்கள், உத்தியோகத்தர்களை வழங்குமாறும் கோரிக்கை விடப்பட்டிருந்தது. எனினும் வெற்றிடம் நிரப்பப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(ஆ) ஊழியர் கடன்

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரையில் சபையின் அறவீடுகள் நிலுவையாகவிருந்த ஊழியர் கடன் மீதி ஓய்வு பெற்றுச் சென்ற 10 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 381,900 தொகையும், மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 409,698 தொகையும், சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 354,810 தொகையும், ஏனைய காரணங்களின் அடிப்படையில் 14 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 146,030 தொகையுமாக கூட்டுப்பெறுமதி ரூபா 1,292,438 தொகை 2022 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் கடன் மீதி, பிணையாளர் களிடமிருந்து, ஓய்வூதிய பணிக் கொடையிலிருந்து, மரண பணிக் கொடையிலிருந்து மற்றும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிட மிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2019-2023 வரை நிலைபேறான அபிவிருத்தி கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் பிரதேச சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் சுகாதாரத்தை கட்டியெழுப்பும் வரையில் நீண்டகால திட்டம் எதுவும் 2021 ஆம் ஆண்டிற்காக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமை காரணமாக உரிய திட்டத்தை அமுல்படுத்த முடியாதிருந்தது. | நிலைபேறான அபிவிருத்திக்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த திட்டம் அமுல்படுத்தப்படல் வேண்டும். |